ஹர்ஷேந்து பிண்டாஸ்
தலைவர், ஃப்ராங்க்ளின் டெம்பிள்டன்
இன்வெஸ்ட்மென்ட்ஸ் (இந்தியா).

## நிம்மதியான ஓய்வுக்காலத்துக்கு...

# சரியான முதலீடு எது?

**முதுமை எல்லோருக்குமே வரத்தான் போகிறது. இளமையில் கஷ்டப்பட்டு வாழ்க்கையை நடத்தும் எல்லோருக்குமே முதுமையிலாவது, அதாவது ஓய்வுக் காலத்திலாவது மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்கிற கனவு கட்டாயம் இருக்கும். இதற்காகவே தங்களின் சம்பாத்தியத்தில் ஒரு பகுதியை ஓய்வுக் காலத்துக்காக முதலீடு செய்கிறோம்.**



ஆனால், எதில் முதலீடு செய்ய வேண்டும், எது ஓய்வுக் காலத்துக்கு சரியான முதலீடு, கடன் சார்ந்த முதலீடா அல்லது ஈக்விட்டி சார்ந்த முதலீடா போன்ற குழப்பங்கள் எல்லோருக்கும் இருக்கும். இந்தக் குழப்பங்களுக்கான பதிலைப் பார்ப்போம்.

ஓய்வுக் காலத்துக்காக முதலீடு செய்யும்போது கடன் சார்ந்த முதலீட்டில் சேமித்து ரிஸ்க் எடுக்கக் கூடாது என்றும் ஈக்விட்டி முதலீடு நீண்ட கால அடிப்படையில் அதிக லாபத்தை தரும் என்றும் ஓர் எண்ணம் நிலவுகிறது. மேலும், இந்த முதலீடு ஒருவர் ஓய்வு பெறும்போது பணவீக்கத்தைத் தாண்டி லாபத்தைத் தரும். பணவீக்கமானது தற்போதைய செலவு மற்றும் ஓய்வுக் கால செலவுக்கும் இடையே பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்திவிடுகிறது.

## ஓய்வுக் கால முதலீட்டை லட்சியமாக்குங்கள்!

ஒருவர் தன்னுடைய ஓய்வுக் கால முதலீட்டை



www.vikatan.com